தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர்.ப.முரளி அர்த்தனாரி Ph.D.,FSKV,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

தேதி: 29-6-2019

வணக்கம்,

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 49வது **நிறுவன நாள் மற்றும் தொலைநிலைக் கல்வி பட்டத்தகுதி பெறும் நாள் ஜுலை 1, 2019 (திங்கட்கிழமை) காலை 10.30 மணியளவில் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அரங்கில்** நடைபெற உள்ளது.

இவ்விழாவில் **புதுதில்லி, வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம், தேசிய மானாவாரி விளைநிலப் பகுதி ஆணைய தலைமை நிர்வாக அதிகாரி முனைவர் அசோக் தல்வாய் இ.ஆ.ப.,** அவர்கள்; **கோவை மேற்கு மண்டல தலைமை அஞ்சல் நிலைய அதிகாரி திருமதி. ஷுலி பர்மன் இ.அ.ப.,** அவர்கள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்வார்கள். (இதற்கான அழைப்பிதழ் இணைக்கப்பட்டுள்ளது).

இவ்விழாவில் வேளாண் பல்கலைக்கழகத்திற்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் இந்திய அஞ்சல் துறை சார்பில் சிறப்பு தபால் உறை வெளியிடப்படவுள்ளது.

எனவே, தங்களுடைய மேலான **நிருபர் மற்றும் புகைப்பட நிருபர்** இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, தங்களுடைய மேலான நாளிதழ் / வானொலி / தொலைக்காட்சி / பத்திரிகையில் செய்தியினை வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நிருபர்கள் வசதிக்காக, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலிருந்து இப்பல்கலைக்கழக வளாகத்திற்கும், விழா முடிவிற்கு பின்னர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் வரைக்கும் வாகன வசதி செய்யப்பட்டுள்ளது. **வாகனங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலிருந்து (01.07.2019) காலை 09.30 மணியளவில் பல்கலைக்கழகத்திற்கு புறப்படும்.**

இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற தங்களுடைய மேலான ஒத்துழைப்பை நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்,

மக்கள் தொடர்பு அலுவலர்

பெறுநர்,
ஆசிரியர் / நிருபர் / புகைப்பட நிருபர்